**தலைப்பு 211 – இலங்கை அச்சக திணைக்களம்**

**--------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 211 – இலங்கை அச்சக திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றினை உள்ளடங்குகின்ற 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 11(1) நிதிக்கூற்றுக்கள் பிரிவின் பிரகாரம் இலங்கை அச்சக திணைக்களத்தின் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, இலங்கை அச்சக திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்திக் குறிப்பு |
|---|---|---|
| சீஏஎம்/டீ/ஜீபி/எம்எல்/2022,1.2.1 (ஈ) (i) | 1989 மார்ச் 23 ஆம் திகதிய 19/89 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் மேலதிக நேர கொடுப்பனவுகளை பெறுவதற்காக உறுதிப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு சன்றுறுதி செய்யப்பட வேண்டும். | 3.2(அ) |
| சீஏஎம்/டீ/ஜீபி/எம்எல்/2022,3.3 (அ) | 1997 திசெம்பர் 16 ஆம் திகதிய 97/5232/17/035 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் 1998 ஜனவரி மாதம் தொடக்கம் திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு வர்த்தக அச்சிடல் கொடுப்பனவு செலுத்தப்படுவதுடன் அது ஒரு மாதகால வர்த்தக அச்சிடல் கட்டளையின் பெறுமதியில் ரூபா 40 மில்லியன் அடிப்படை தொகை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தக அச்சிடல் கொடுப்பனவு செலுத்தப்படும். 23 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அடிப்படை பெறுமதி சந்தை நிலைமைகளுடன் திருத்தப்பட வேண்டும். | 3.2(அ) |
| சீஏஎம்/டீ/ஜீபி/எம்எல்/2022,3.3 (ஆ) | வர்த்தக அச்சிடல் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென்று அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிரய கணக்கீட்டு முறைமையினை அறிமுகப்படுத்துதல், அச்சிடல் பணிகளின் உற்பத்தி வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் இனங்காணப்பட்ட ஏற்பாடுகளுடன் செயற்திட்டமொன்றினை உருவாக்குதல் | 3.2(ஆ) |

அல்லது அதற்கு மாற்றாக முற்பணக் கணக்கினை உருவாக்குதல் என்ற மூன்று நிபந்தனைகள் 1998 முதல் 2023 வரை பூர்த்தி செய்யப்படாமையினால் அந்த நிபந்தனைகளினை கூடிய விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமானப் பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களம் காசு அடிப்படையில் பெறுமதி கூட்டிய வரியினை செலுத்துவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், வாடிக்கையாளர்களுக்கு பட்டியல்களினை வழங்கும் நேரத்தின் போதான வரி வீதங்களுக்கும் பட்டியல்களுக்கான பணத்தினை பெறும் நேரத்தில் காணப்படும் வட்டி வீதங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தின் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக திரும்பப்பெற முடியாத மொத்தப் பெறுமதி ரூபா 7,735,242 தொகை மீளப் பெற முடியாத போலியான வருமானமாக முன்வைக்கப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம், திறைசேரியின் நிதிக் கொள்கை திணைக்களம் மற்றும் அரச அச்சக திணைக்களம் என்பன கலந்துரையாடல் மூலம் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதுடன் இந்த நோக்கத்திற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடம் கலந்துரையாடலை கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. பெறுமதி கூட்டப்பட்ட வரி வீதத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரின் (வரிக் கொள்கை மற்றும் சட்டம்) அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இணைந்து இந்தப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது 211-1-1-0-1301, 211-1-1-0-2003, 211-1-2-0-1301 மற்றும் 211-1-2-0-2003 என்ற செலவினக் குறியீடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் தொடர்ச்சியாக எந்த செலவிம் | ஆண்டின் இறுதி வரையிலான செலவினங்களை மீளாய்வு செய்யும் போது மூலதன செலவின பேரேட்டில் பதிவு செய்யப்பட்ட குறைந்த பெறுமதியுடைய வாகன | தொடர்புடைய சட்ட ஏற்பாடுகளின் கீழ் செலவினம் ஏற்படும் நேரத்திலேயே அது மீண்டெழும் செலவினமா அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டெழும் அல்லது மூலதன செலவினங்களாக கருதப்படும் என்று தெளிவாக வகைப்படுத்தாமல் வாகனங்களுக்கான செலவினம் 211-1-1-0-1301, 211-1-1-0-2003, 211-1-2-0-1301 மற்றும் 211-1-2-0-2003 பேரேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. | திருத்தங்கள் மீண்டெழும் செலவினமாக மாற்றப்பட்டதுடன் மீண்டெழும் பேரேட்டில் பதிவு செய்யப்பட்ட உயர் பெறுமதியுடைய பிரதான மதிப்புடைய வாகன திருத்தங்கள் மாற்றுதல் குறிப்புக்களின் கீழ் மூலதன பேரேட்டுக்கு மாற்றப்பட்டன. | மூலதன செலவினமா என்பதனை கண்டறிந்து சரியாக கணக்கீடு செய்வதற்கு தேவையானதொரு கட்டுப்பாட்டு சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்படாத துண்டுகளின் எண்ணிக்கைக்கான கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக திணைக்களத்தின் 211-1-2-0-1205 எனும் பல்வேறு வழங்கல் குறியீட்டிலிருந்து முறையான ஒப்புதலின்றி ரூபா 298,375,331 செலுத்தப்பட்டுள்ளது. | 2023 இல் நடைபெற இருந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்கூட்டியே அச்சடித்து, அதன் பின் தேர்தல் ஆணைக்குழு வழங்கிய ஒதுக்கீட்டினை நடத்தாத காரணத்தினால் 211-01-02-1003 செலவின குறியீட்டு ஒதுக்கம் போதாமைக்கு காரணமாக அமைந்தது. மேலும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் இ-கிராம திட்டம் மற்றும் விவசாய அமைச்சின் விஷேட உர வவுச்சர்கள் போன்ற விஷேட அச்சக நடவடிக்கைகளுக்காக ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த மேலதிக தொழிலாளர் கிரயங்களும் மற்றும் 6 சதவீத மீண்டெழும் செலவின குறைப்பும் காரணமாக அந்த செலவின குறியீட்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் போதாமையாக அமைந்தது. | செலவின குறியீடுகளின் வரையறைக்குள் செலவினங்களினை நிர்வகிக்க வேண்டும். அந்த செலவின குறியீட்டின் ஏற்பாடுகள் போதுமானதாக இல்லையெனில், அந்த நோக்கத்திற்கான சட்ட கட்டமைப்பினுள் இருந்து முறையான அங்கீகாரத்தின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த தொகைக்கு தேவையான அனுமதியை உடனடியான பெறப்பட வேண்டும். |

**(இ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியான வர்த்தக அச்சிடல் வைப்பு மீதி ரூபா 82,161,668 ஆகவும், 2024 மார்ச் 31 ஆம் திகதியளவில் 2022 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 9,595,684 மதிக்கத்தக்க வர்த்தக அச்சிடல் வேலைகளை பூரணப்படுத்துவதற்கு திணைக்களம் தோல்வியடைந்துள்ளது. | திணைக்களத்தின் வர்த்தக வைப்புக் கணக்கானது வர்த்தக அச்சிடல் நடவடிக்கைகளுக்காக பராமரிக்கப்படுவதுடன் அச்சிடும் பணிகளை மேற்கொள்வதற்கு முன் ஒரு ஏற்பாடாக சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் அச்சிடும் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டை உள்ளடக்குகின்றது. இங்கு, சம்பந்தப்பட்ட பணி | கட்டளைகளை தாமதமின்றி முடிக்கக்கூடிய வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முடிவடைந்ததும் இது வர்த்தக வைப்புக் கணக்கில் இருந்து குறைக்கப்படும், அதே நேரத்தில் புதிய அச்சிடல் பணிகளுக்கான ஏற்பாடு மீண்டும் பெறப்படும், எனவே இந்தக் கணக்கு பூச்சியமாக்க முடியாத மீதியாகும் என தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 முதல் 2019 வரையான காலப்பகுதியில் 2023 திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வருமான மீதி ரூபா 162,170,469 ஆக இருந்தது. அந்த மீதியில் ஒரு மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான 21 அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 81,348,365 தொகையினை மீளாய்வாண்டின் போது அறவிடப்படவில்லை. | 2010 முதல் 2019 வரையான காலப்பகுதியில் நிலுவையாக உள்ள வருமான மீதி 2024 மார்ச் 31 ஆம் தினமன்று ரூபா 161,578,044 ஆகும். 2024 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், மீளப்பெறுவது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிலுவையாக உள்ள மீதிகளை மீளப் பெறுவதற்கு விரைவான வேலைத் திட்டமொன்றினை உருவாக்கி செயல்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2009 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் அச்சிடல் பணிகளுக்காக 10 நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 81,019,843 நிலுவை வருமான மீதி மீளாய்வாண்டின் போது மீளப் பெறப்படவில்லை. | 2009 ஆம் ஆண்டுக்கு முதல் அரச அச்சக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சேவைக்காக ஸ்ரீ லங்கா டெலிகொம் பி.எல்.சீ நிறுவனத்திடம் இருந்து அறவிட வேண்டிய 10,155,733 ரூபா தொகை தொடர்பாக செய்யப்பட்ட பணிகள் குறித்து தகவலை பெறுவதற்கு நாங்கள் ஏற்கனவே பணியாற்றி வருகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிலுவையாக உள்ள மீதிகளை மீளப் பெறுவதற்கு விரைவான வேலைத் திட்டமொன்றினை உருவாக்கி செயல்படுத்த வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சினால் 2023 ஜனவரி 27 அன்று வெளியிடப்பட்ட ஆம் 01/2023 இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் (02)(இ)iii இன் பிரகாரம் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என்பவற்றினை குறைந்தபட்சம் 06 சதவீதத்தினால் குறைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆனால், திணைக்களத்தினால் பாதீட்டில் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக நி.பி 66 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூபா 95,000,000 தொகையும், முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 298,375,331 தொகையும் மற்றும் 2023 திசெம்பர் 31 இல் பொறுப்புக்கள் ஆவணத்தில் உள்ளடக்கப்படாத திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய 2024 ஜனவரி மற்றும் பெப்ரவரி இரு மாதங்களில் செலுத்தப்பட்ட கொடுப்பனவு ரூபா 92,353,696 தொகையுடன் சேர்த்து மொத்தமாக ரூபா 1,509,819,572 தொகை மேலதிக நேரம் மற்றும் ஏனைய கொடுப்பனவாக செலவிடப்பட்டுள்ளது. ஆனால், 2023 ஆண்டில் மேலதிக நேர மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக பாதீட்டில் ரூபா 992,000,000 ஏற்பாடு அனுமதியளிக்கப்பட்டது.<br>ஆகையினால், 01/2023 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை மீறி மொத்த மேலதிக நேரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என்பவற்றில் அனுமதிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக 52.2 சதவீதத்தினை திணைக்களம் செலவளித்துள்ளது. | இத்திணைக்களத்தின் தன்மைக்கு ஏற்ப ஒவ்வொரு பணியிலும் ஈடுபடும் அதிகாரிகளுக்கு கடமை நேரம் முடிந்த பிறகும் மற்றும் வார இறுதி நாட்களிலும் அரச அத்தியவசிய மற்றும் அவசர கடமைகளுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே 211-01-02-1002 செலவின குறியீட்டுக்காக ரூபா 40 மில்லியன் ஏற்பாடு ந.பி 66 இன் கீழ் அனுமதியுடன் மாற்றப்பட்டு செலுத்தப்பட்டதுடன் அந்த நேரத்தில் தேர்தல் அச்சிடல் பணிகளின் 90 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் தேர்தல் ஆணைக்குழு எங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா 300 மில்லியனை 211-01-02-1003 செலவின குறியீட்டுக்காக மறு ஒதுக்கீடு செய்தது. நி.பி 66 இன் கீழ் இந்த ரூபா 300 மில்லியன் ஏற்பாட்டினை மாற்றுவது தொடர்பான பணிகள் இறுதிக் கட்டத்தில் தற்போது உள்ளது என தெரிவித்துக் கொள்வதுடன் இது போன்ற சந்தர்ப்பங்களில் நிறுவனங்களை எவ்வாறு பராமரிப்பது என்பது குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.<br>அத்துடன், இத்திணைக்கள ஊழியர்களினால் தாமதமின்றி அரசாங்க அத்தியவசிய அச்சிடல் பணிகளை கொண்டு செல்வதற்காக துண்டுகளின் எண்ணிக்கைக்கு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளை முறையாக செலுத்தாதுவிடின் ஊழியர்களின் அமைதியின்மையை கட்டுப்படுத்துவதற்காக தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரின் விழிப்புணர்வுடன் 211-01-02-1205 செலவின குறியீட்டின் கீழ் ரூபா 338,369,363 கொடுப்பனவு செலுத்தப்பட்டன என்பதனை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் இணங்க வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான சூழ்நிலைகள் ஏற்படுவதை தடுக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் உருவாக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாடுகளின் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஊழியர் பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்ட 211-1-1-0-2401 மற்றும் 211-1-1-0-2401 செலவின குறியீடுகள் ஊடாக மீளாய்வாண்டின் திசெம்பர் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் ரூபா 2,504,000 தொகை இலங்கை அச்சக நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், இந்த கொடுப்பனவிற்காக 2023 ஆம் ஆண்டின் போது அச்சக திணைக்களத்தின் எவ்வித ஊழியர்களுக்கும் பயிற்சி கற்கைநெறிகள் நடத்தப்படவில்லை என்பதுடன் இந்த ஆண்டின் இறுதியளவில் ஏற்பாட்டினை நிறைவு செய்யும் நோக்கிலேயே இந்தக் கட்டணம் செலுத்தப்பட்டது என்று அவதானிக்கப்பட்டது. | அரசாங்க அச்சக திணைக்கள ஊழியர்களின் பதிவியுயர்வு அரசியலமைப்பின் பிரகாரம் இலங்கை அச்சக திணைக்களத்தின் இணைந்த நிறுவனமாக இலங்கை அச்சக நிறுவனத்தினால் நடத்தப்படும் கற்கைநெறிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். 2023 ஆம் ஆண்டில் கற்கைநெறி கட்டணம் செலுத்தியதன் அடிப்படையில் 116 உத்தியோகத்தர்கள் நடத்தப்பட்ட 10 கற்கைநெறிகளில் பங்குபற்றினர்.. | குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் அந்த செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் தடுக்க தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நிறுவப்பட வேண்டும். |

### 3.2 ஏனைய அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1997 திசெம்பர் 16 ஆம் திகதிய 97/5232/17/035 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்திற்கு அமைவாக 1998 ஆம் ஆண்டு முதல் திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வர்த்தக அச்சிடல் கொடுப்பனவு செலுத்தப்படும், என்பதுடன் அங்கு ஒரு மாதத்தின் வர்த்தக அச்சிடல் கட்டளை மதிப்பு தொகை அடிப்படையில் ரூபா 40 மில்லியன் வீதத்தில் நிர்ணயிக்கப்பட்டு வர்த்தக அச்சிடல் கொடுப்பனவு செலுத்தப்படும். இது 1998 முதல் நடைமுறையில் உள்ளதுடன், அந்த ஆண்டு முதல் இன்று வரை பணவீக்கம் மற்றும் பொது சேவை சம்பள அதிகரிப்பு போன்ற | 1998 மார்ச் 04 ஆம் திகதிய 97/5232/17/035 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலமான அனுமதியின் பிரகாரம் திணைக்களத்தின் அந்த வர்த்தக உற்பத்தி பொருட்களுக்காக ரூபா 40 மில்லியன் பெறுமதியுடைய அந்தந்த ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தில் 100 சதவீத வீதத்தில் ஊக்கத்தொகையினை செலுத்துவதற்கு அனுமதியளித்தது. அதற்காக அந்த அதிகாரி குறைந்தபட்சம் 18 நாட்களும் மேலதிகமாக 22 மணித்தியாலங்களும் கடமைபுரிந்திருக்க வேண்டும்.<br><br>பின்னர், அந்த ஊக்கத் தொகை | விலை உயர்வு மற்றும் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு போன்ற காரணிகளை கருத்திற் கொண்டு வர்த்தக அச்சடிப்பு கொடுப்பனவில் பயன்படுத்தப்படும் பழைமைவாய்ந்த இந்த 25 ஆண்டு அடிப்படை வெளியீடு (40 மில்லியன்) உடனடியாக திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணிகளை கருத்திற்கொண்டு ரூபா 40 மில்லியன் என்ற தொகையினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கொடுப்பனவு அதே மாதத்தில் ரூபா 40 மில்லியன் மதிக்கத்தக்க வர்த்தக உற்பத்திப்பொருள் பெறுமதியில் அந்தந்த உத்தியோகத்தரின் அடிப்படைச் சம்பளத்தில் 60 சதவீதம் வரை குறைக்கப்பட்டது, மற்றும் குறைந்தபட்சம் 18 நாட்கள் வேலைக்கு சமூகளிக்க வேண்டியதுடன் மேலதிக வேலை நேரம் 30 மணித்தியாலங்கள் வரையும் அதிகரிக்கப்பட்டது. இந்த சலுகையை பெற வருடத்தின் 365 நாட்களில் எல்லா நேரமும், 24 மணி நேரத்தில் எல்லா நேரமும் சேவைக்கு சமூகமளிக்க வேண்டும். மேற்கூறிய கொடுப்பனவுக்காக வர்த்தக அடிப்பயையில் இல்லாத சகல உற்பத்திப்பொருட்களும் தினசரி உற்பத்தியாக நீக்கப்பட்டு வர்த்தக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி பொருட்களின் பெறுமதி மாத்தரமே கருத்தில் கொள்ளப்படும். இதற்கு, விடுமுறை கொடுப்பனவினை அல்லது வேறு எந்தக் கொடுப்பனவினையும் பெறுவதற்கு குறைந்தபட்சம் 18 நாட்கள் மற்றும் மேலதிக 30 மணித்தியாலங்கள் என்ற விடயம் உரித்தில்லை.<br><br>மேலும் இந்தக் கொடுப்பனவு வர்த்தக அச்சக உற்பத்தி பொருட்களின் மதிப்பின் அடிப்படையில் ஈட்டப்படுவதுடன் ஒவ்வொரு மாதத்திலும் ஈட்டப்பட்ட தொகை ஒரே மாதிரியாக இருக்காது. வர்த்தக ரீதியற்ற அச்சக உற்பத்திக்கு இந்தக் கொடுப்பனவு உரித்தில்லை. இந்த சலுகையை காலத்திற்கு ஏற்றவாரு திருத்துவது உள்ளிட்ட தேவையான பணிகள் நிறைவடைந்துள்ளன. | |
| **(ஆ)** | வர்த்தக அச்சடிப்பு கொடுப்பனவை செலுத்துதல் தொடர்பாக அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட கிரயக் கணக்கீட்டு முறைமையை அறிமுகப்படுத்தல், அச்சிடும் பணிகளின் உற்பத்தி வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் இனங்காணப்பட்ட ஏற்பாடுகளுடன் செயற்திட்டமொன்றினை | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருவாக்குதல் அல்லது மாறாக முற்பணக் கணக்கொன்றினை உருவாக்குதல் என்ற மூன்று நிபந்தனைகளை 1998 ஆம் ஆண்டு முதல் பூர்த்தி செய்யாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 17,429,244 தொகை வர்த்தக அச்சிடல் கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது. | | |
| **(**இ) | 2008 திசெம்பர் 02 ஆம் திகதிய B/8/3/706/969/21 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் உற்பத்தி தரத்தினை உயர்த்துவதற்காக செலுத்தப்படும் கொடுப்பனவுகள் 2018 ஆம் ஆண்டு வரை ஊழியரின் சம்பளத்தில் 65 சதவீதமாக இருப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டது. எனினும், அரசாங்க அச்சக திணைக்கள ஊழியர்களுக்கு அவர்களின் மாதாந்த சம்பளத்தில் 65 சதவீதத்தினை விஞ்சி 102 சதவீதம் முதல் 353 சதவீதம் வரையிலான பல்வேறு வகையான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று திணைக்களத்தின் இரு பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தெரிய வந்தது. | அரசாங்க அச்சக திணைக்களம் வருடத்தின் 365 நாட்களில் எந்த நாளும் மற்றும் 24 மணி நேரத்தில் எல்லா நேரமும் கடமையாற்ற வேண்டும் என்பதால் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு பல வருடங்களாக கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டு வந்தது. ஊழியர்களுக்கு வழங்கப்படும் இந்தக் கொடுப்பனவு தொடர்பான அறிக்கைகள் காலத்துக்குக் காலம் சம்பள ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டாலும் அதனை எளிய முறையில் தயாரிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கொடுப்பனவுகளை மேலும் எளிய முறையில் தயாரிப்பதில் தற்போதைய நலன்கள் தொடர்பான பிரச்சினையான சூழ்நிலைகளை உருவாக்காத வண்ணம் உயர்தொழில் தரப்பினர்களுடன் கலந்துரையாடி, நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகிய இருவரின் நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு நடுநிலையான உடன்பாடுகளை எட்டுவது அவசியமாகும். அதன்படி, வரைவு பூர்வாங்கல் அறிக்கையின் விடயங்கள் தொடர்பான மேலதிக ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கொடுப்பனவுகள் செலுத்துவது தொடர்பான இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும், இது இறுதிக் கட்டத்தில் உள்ளது என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன். | அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு முறைமை நிறுவப்பட்டு உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2008 திசெம்பர் 02 ஆம் திகதிய B/8/3/706/969/21 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் நிறுவனப் பணிப்பாளர் துண்டுகளின் எண்ணிக்கை கொடுப்பனவுகளை திணைக்களத்தில் 2018 ஆம் ஆண்டுக்காக மாத்திரம் அனுமதியளித்துள்ளார், அதன் பின்னர் திணைக்களமானது நிறுவனப் பணிப்பாளரின் அனுமதியைப் பெறாமல் துண்டுகளின் எண்ணிக்கை கொடுப்பனவுகளை எடுத்துள்ளதுடன், மீளாய்வாண்டில் அனுமதியின்றி ரூபா 814,476,871 தொகை துண்டுகளின் எண்ணிக்கை கொடுப்பனவாக எடுத்துள்ளது. | 1981 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்தக் கொடுப்பனவினை செலுத்துவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியின் அடிப்படையில் செலுத்தப்பட்டதுடன், மீண்டும் 2006/6 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பின்னர் சம்பள திருத்தங்களுக்கு அமைவாக காலத்துக்கு காலம் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து அனுமதிகள் பெறப்பட்டதுடன், அதே போன்று 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அங்கீகாரம் பெறப்பட்டது. 2019 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவினை செலுத்துவதற்காக அனுமதியை பெற முன்னாள் உரிய அமைச்சுக்கு குறிப்பிடப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் திணைக்களம் 05 மேற்பட்ட அமைச்சுக்களை குறிப்பிட்டது கூட இந்த வேலை தாமததித்தமைக்கு ஒரு காரணமாகும். பின்னர்,விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு, திறைசேரி, தேசிய சம்பள ஆணைக்குழு, பொது நிர்வாக அமைச்சு போன்ற நிறுவனங்களுடன் மீளாய்வு அறிக்கையை தயாரிக்கும் அலுவலர்களின் பங்குபற்றலுடனும், பொது நிர்வாக அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களின் பணிப்பாளர் நாயகம் மற்றும் உரிய அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரி ஒருவரை உள்ளடக்கிய உறுப்பினர்களைக் கொண்ட குழவினால் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாவும், பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். | 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி நிறுவனம் கொடுப்பனவுகளை பெற்றுள்ளது. சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளுக்காக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். மேலும், எதிர்காலத்தில் நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி கொடுப்பனவுகளை செலுத்துவதில்லை என்பதை நிறுவனம் உறுதி செய்ய வேண்டும். |
| (உ) | திணைக்களத்தின் அலுவலர்களுக்கு அச்சக தலைவரை தவிர அனுமதியின்றி வழங்கப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கையிலான கொடுப்பனவின் கணிப்பீட்டை, உற்பத்தி பணியில் நேரடியாக ஈடுபட்ட அலுவலர்களுடன் ஒப்பீடு செய்யும் | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | நியாயமாக அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவு திட்டம் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது பணியாளர் அலுவலகர் உட்பட ஏனைய அலுவலர்களால் பெறப்பட்ட கொடுப்பனவுகளில் ஏற்றத்தாழ்வு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | திணைக்கள மேன்முறையாளர் மற்றும் அச்சிடும் உதவி அலுவலர்களின் துண்டுகள் எண்ணிக்கைக்கான கொடுப்பனவுகளின் கணிப்பிடுவது உற்பத்தியில் நேரடியாக பங்களிப்பு செய்யும் அதிகாரிகளின் மொத்த துண்டுகள் கொடுப்பனவு எண்ணிக்கையின் அடிப்படையிலாகும், மற்றும் இந்த மேன்முறையாளர் மற்றும் அச்சிடல் உதவி அலுவலர்களின் உற்பத்தி நியமங்கள் குறிப்பாக இனங்காணப்படவில்லை. இவ்வாறாக உற்பத்தி நியமங்களினை இனங்காணாமல் பைண்டிங் ஏ பிரிவில் மேன்முறையாளர் மற்றும் 9 அச்சிடல் அலுவலர்களுக்கு மீளாய்வாண்டின் முதல் 07 மாதங்களில் ரூபா 5,345,002 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | தற்போது திணைக்களத்தில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் துண்டுகள் எண்ணிக்கைக்கான கொடுப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல் தொடர்பாக் அனுமதியைப் பெற அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>புத்தக பராமரிப்பு பிரிவில் மேன்முறையாளர் மற்றும் அச்சிடும் உதவியாளர்களின் துண்டு எண்ணிக்கை கொடுப்பனவுகள் திணைக்களத்தில் உள்ள ஏனைய ஊழியர்களின் துண்டு எண்ணிக்கை கொடுப்பனவுகளின் சதவீதமாக செலுத்தப்படுகின்றன. ஏனெனில், ஒரு பிரிவின் கட்டுப்பாட்டாளர் அந்த பிரிவின் நிர்வாகத்திற்கு பங்களிப்பு செய்யும் அலுவலராக இருப்பதுடன், அவர் அல்லது அவள் பிரிவின் முழு உற்பத்தி செயன்முறையையும் மேற்பார்வையிடுகிறார். ஆகையினால், அவர் அல்லது அவளால் குறிப்பிட்ட உற்பத்தி நியமத்தை இனங்காண முடியாதுடன், அவர் அல்லது அவள் பிரிவின் முழு உற்பத்தி செயன்முறையையும் மேற்பார்வையிட வேண்டியுள்ளது. எனவே, அவர் அல்லது அவளால் உற்பத்தி நியமத்தை இனங்காண முடியாதமையினால் மேற்குறிப்பிட்டபடி உற்பத்திக்கு நேரடியாக பங்களிப்பு செய்யும் அலுவலர்களுக்கு துண்டு எண்ணிக்கை கொடுப்பனவுகளின் சதவீதமாக செலுத்தப்படுகின்றன.<br><br>அச்சிடும் உதவியாளர்களும் திணைக்களத்தின் உற்பத்தி செயன்முறைக்கு உதவிசெய்கின்ற ஒரு வகையாக இருப்பதுடன் அவர்களின் உற்பத்தி நியமம் இனங்காணப்படக்கூடியது அல்ல. எனவே கட்டுப்பாட்டாளர்களுக்கு வழங்கப்படுவது போலவே | விஞ்ஞான வேலை நியமங்களுடன் கூடிய நியாயமாக அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு திட்டமொன்று உடனடியாக நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவர்களுக்கும் அவ்வாறு கொடுப்பனவு செலுத்தப்படுகின்றன. | |
| (எ) | துண்டுகளின் எண்ணிக்கைக்கான கொடுப்பனவுகளை கணிப்பிடுவதற்கு திணைக்களத்தின் பிரிவுகளில் பல்வேறு வழிகாட்டுதல்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவைகள் எவ்விதமான அனுமதியின்றி அச்சக அலுவலரின் விருப்பத்தின்பேரில் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் கண்டறியப்பட்டது. | செலுத்தப்பட்ட சதவீதத்தில் ஏற்றத்தாழ்வு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதனால் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது. | கூடிய விரைவில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு திட்டம் நிறுவப்பட வேண்டும். |
| (ஏ) | துண்டுகளின் எண்ணிக்கை கொடுப்பனவுகளை கணிப்பீடு செய்வதற்காக திணைக்களத்தின் அனுமதியின்றி பிரிவுகளில் பல்வேறு வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றன என்றும் வழிகாட்டுதல்களில் உள்ள நிபந்தனைகளை பின்பற்றாமல் கொடுப்பனவுகள் கணிப்பிடப்படுகின்றன என்றும் கண்டறியப்பட்டுள்ளது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் முதல் 07 மாதங்களில் பைண்டிங் ஏ பிரிவின் கொடுப்பனவுகளை கணிப்பீடு செய்வதில் உள்ள ஒரு நிபந்தனையாக ‘‘துண்டுகளின் எண்ணிக்கைக்கான கொடுப்பனவை பெறுவதற்கு ஒவ்வொரு ஊழியரும் உரிய மாதத்தில் 18 நாட்களும், அந்த நாட்களில் மேலதிகமாக ஒரு மணித்தியாலமும் பணியாற்ற வேண்டும்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நிபந்தனையை பொருட்படுத்தாமல் 2023 ஆம் ஆண்டின் முதல் 07 மாதங்களில் துண்டுகளின் எண்ணிக்கை கொடுப்பனவாக ரூபா 10,193,463 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | துண்டுகள் எண்ணிக்கை கொடுப்பனவுகளை கணிப்பிடுவதற்கான வழிகாட்டி தயாரிக்கப்பட்டு இது தொடர்பாக சகல கட்டுப்பாட்டாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பிரிவுகளின் கட்டுப்பாட்டாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் தெரிவிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு திட்டமொன்று கூடிய விரைவில் நிறுவப்பட வேண்டும். அத்துடன், உரிய நிபந்தனைகளை மீறி பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மீளப்பெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஐ) | திணைக்களத்தின் பைண்டிங் ஏ பிரிவில் துணை மேன்முறையாளர் பதவியை வகிக்கும் அலுவலகர் 2023 மே 18 முதல் 2023 யூலை 04 வரை இலங்கையை விட்டு வெளியேறியதுடன் அந்த காலப்பகுதியின் போது 2023 யூன் மாதத்திற்காக துண்டு எண்ணிக்கை கொடுப்பனவாக ரூபா 147,735 தொகை செலுத்தப்பட்டது. இந்தக் கொடுப்பனவு 2023 ஏப்ரல் மாதம் வரையான அந்த அலுவலருக்குரிய | புத்தக பைண்டிங் ஏ பிரிவில் உள்ள துணை மேன்முறையாளர் பதவியை வகிக்கின்ற அதிகாரி 2023 மே 18 முதல் 2023 யூலை 04 வரை சம்பளத்துடன் கூடிய விடுமுறையில் வெளிநாடு சென்றார். துணை மேன்முறையாளருக்கு 2023 மே மாதத்தில் அதாவது மே 01 முதல் மே 17 வரையாக செலுத்தப்பட்ட ரூபா 170,152 தொகையில் 09 சதவீதமான தொகையின் 75 | தனிப்பட்ட கொடுப்பனவுகள் எதுவும் செலுத்தப்படக்கூடாது என்றும் நிர்ணயிக்கப்பட்ட காலம் தொடர்பான கொடுப்பனவுகள் சரியாக கணிப்பிடப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காலத்தினுள் |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த நிலுவைத்தொகையாக காட்டப்பட்டுள்ளது. ஆனால், திணைக்களத்தின் ஏனைய அலுவலர்களுக்கும் இவ்வாறு நிலுவைத் தொகையை செலுத்த வேண்டியிருந்த நிலையில் எந்த அடிப்படையில் இந்த அலுவலருக்கு முதலில் நிலுவைத் தொகை செலுத்தப்பட்டது, யாரிடமிருந்து இதற்கு அனுமதி பெறப்பட்டது மற்றும் அதனோடு தொடர்புடைய கணிப்பீடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்ற விடயங்கள் கணக்காய்வில் வெளிப்படவில்லை. | சதவீதம் அந்தந்த எண்ணிக்கையிலான துண்டுகளுக்கு செலுத்தப்பட்டது. யூன் 2023 ஆம் மாதத்திற்காக துண்டுகளின் எண்ணிக்கைக்கு எவ்வித கொடுப்பனவுகளும் செலுத்தப்படவில்லை, மற்றும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 147,735 தொகை முன்னைய மாதங்களில் ஏப்ரல் மாதம் வரையிலான மொத்த நிலுவையாகும். காலத்துக்குக் காலம் கொடுப்பனவுகள் தொடர்பில் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளின் போது இது செலுத்தப்படாமல் விடப்பட்ட தொகையாகும் எனவும் இந்த அலுவலருக்கு மாத்திரமே செலுத்தவேண்டிய விடயமல்ல எனவும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். | செலுத்தப்பட வேண்டும். |
| (ஒ) | 1989 மார்ச் 23 ஆம் திகதிய 19/89 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் மேலதிக நேர கொடுப்பனவை பெறும் போது உறுதிப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு சான்றுறுதி செய்யப்பட வேண்டுமாயினும் ஒவ்வொரு பணியாளரும் மேலதிக நேர உறுதிப்பத்திரங்களை தயாரிப்பதில்லை, மற்றும் திணைக்களப்பிரிவினால் வழங்கப்பட்ட நேரக் கணிப்பை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஓ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 2.1 இன் பிரகாரம் திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் “மேலதிக நேர கொடுப்பனவை பெறுவதற்கு மேலதிக நேர பணி முறையாகவும் நியாயமாகவும் செய்யப்பட்டுள்ளதா என்பதனை தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்தி திருப்தியடைய வேண்டும்”. சரியான அளவிலான வேலை நிறைவேற்றப்படுவதனையும் விளைவற்ற நேரத்திற்காக அந்த மேலதிக நேரக் கொடுப்பனவு | திணைக்களத்தில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அவ்வாறு துண்டு வீத வேலைக்கான மேலதிக நேரம் வழங்கப்படமாட்டாது என்பதுடன், மேலதிக நேரம் பெறப்படும் போது மேலதிக நேரத்திற்குரிய வேலை நியாயமாக பூர்த்தி செய்யப்படும். பகல் அல்லது இரவு தொடர்பான மேலதிக நேர வேலையின் போது அந்த அலுவலர்களுக்கு குறிப்பிடப்பட்ட பணி வழங்கப்பட்டு, அது முடிக்கப்பட்ட மறுநாளே முடிக்கப்பட்ட பணி தொடர்பான அறிக்கை வழங்கப்படும் என்பதனை தெரிவித்துக் | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்பட நிறுவனத் தலைவர் கடுமையாக செயல்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்படவில்லை என்பதையும் நிச்சயித்துக் கொள்வதற்கு முறையான பரிசோதனையும் பதிவேடுகளை பராமரிக்கும் முறைமையினையும் தயாரிப்பது திணைக்கள தலைவரின் கடமையாகும். நேரக்கணிப்பு பிரிவு வழங்கிய மேலதிக நேரங்களை அடிப்படையாகக் கொண்டு அச்சக திணைக்களத்தினால் மேலதிக நேரம் செலுத்தப்பட்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட பிரிவுகளின் பணியினை பிரதான அல்லது உதவி அச்சிடல் உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளதா அல்லது அந்த நேரத்தின் போது பணிகள் நிறைவேற்றப்பட்டதா என்பது குறித்து விசாரணை செய்யவோ அல்லது அறிக்கையிடவோ இல்லை. | கொள்கின்றேன். | |
| (ஔ) | திறைசேரி செயலாளரின் 2023 பெப்ரவரி 02 ஆம் திகதிய 02/2023 ஆம் இலக்க வரவு செலவுத்திட்டத்தின் நிபந்தனைகளுக்கு இணங்காமல் 2023 ஆம் ஆண்டில் அச்சிடல் பணிகளின் செயல்திறனுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக பொது மற்றும் தனியார் நிறுவனங்களிடம் இருந்து சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 210,048,234 ஆக இருந்தது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (க) | திறைசேரி செயலாளரின் 2023 பெப்ரவரி 02 ஆம் திகதிய 02/2023 ஆம் இலக்க வரவு செலவுத்திட்டத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் ‘‘பிற்போட முடியாத அத்தியவசிய பொது சேவைகள் மற்றும் அன்றாட அத்தியவசிய கடமைகள் தொடர்பாக கடன் அடிப்படையில் பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் சேவைகள் வழங்குவதில் இந்த சுற்றறிக்கை தடையாக இருக்கக் கூடாது’’ என்று குறிப்பிடப்பட்ட போதிலும் தேர்தல் வேலைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் இலங்கை அச்சக திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட ரூபா 260 மில்லியனை வழங்காமையினால் தேர்தல் பணிக்காக திட்டமிடப்பட்ட முழு அச்சிடல் பணியும் நடக்கவில்லை. | தேர்தல் ஆணைக்குழுவினால் எங்களுக்கு ஒதுக்கிடப்பட்ட ரூபா 300 மில்லியன் தொகையில் ரூபா 260 மில்லியன் மீள ஒதுக்கப்பட்டது. 2023 உள்ளூராட்சி தேர்தலுடன் தொடர்பாக ஒப்படைக்கப்பட்ட சகல கட்டளைகளுக்குமான வேலைத் தாள்கள் வழங்கப்பட்டு, தொடர்புடைய திணைக்களங்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதில் குறிப்பிடத்தக்க வேலைத்தாள்கள் 2023 மார்ச் 16 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தேர்தல் பணிகளுக்காக தேர்தல் ஆணைக்குழு எங்களுக்கு ரூபா 40 மில்லியன் மாத்திரமே செலுத்திய போதிலும் எங்களின் திணைக்களம் தேர்தவுக்கான பணிகளை நிறுத்தவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையின் மின்தூக்கியினை பழுதுபார்ப்பதற்கு முன்னர் நிபுணரின் அறிவுரை மற்றும் முறையாக விசாரணை மேற்கொள்ளாமலும், முறையான பெறுகை செயன்முறை பின்பற்றப்படாமையினாலும் ரூபா 98,150 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட INVENTOR MOTHER BOARD விளைவற்று திணைக்களத்தின் களஞ்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. | இந்த மின்தூக்கி சிற்றுண்டிச்சாலையின் மின்தூக்கியாக இருப்பதனால் இதனை மிக விரைவாக சரிசெய்யுமாறு சிற்றுண்டிச்சாலையின் முகாமைத்துவம் கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால், திருத்துவதற்காக மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டின் பெறுமதி மிக அதிகமாக இருந்தமையினால் பெறுகை சபையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த தவறை சரிபார்த்து சரி செய்ய முடியுமா என்று திணைக்களத்தின் மின்சார பிரிவிடம் வினவியது. அதன்படி, மின்சார பிரிவு அதிகாரிகள் இதனை சோதனையிடும் போது மேற்கூறிய Control Board (Inverter Motherboard) உதிரிப்பாகம் செயலிழந்துள்ளதை அவதானித்தனர். மின்சார சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அந்த பாகத்தினை கொள்வனவு செய்யும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு அது கிடைக்கும் வரை மின்சார பிரிவு இந்த உருப்படியை திருத்துவதற்கு முயற்சி செய்ததுடன், தற்போது இது முறையாக இயங்குகின்றது. அங்கே, Inverter Motherboard இனை கொள்வனவு செய்வதற்காக ரூபா 98,150 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், Inverter Motherboard பாகத்தை தற்போது பயன்படுத்தாமல் அவசர தேவை ஏற்பட்டால் பயன்படுத்துவதற்கு இருப்பு உருப்படியாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகள் நன்கு திட்டமிடப்பட்டு உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு உள்ளக கட்டுப்பாடு முறைமை உடனடியாக முறைப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1964 இன் 28 ஆம் இலக்க காணி கைப்பற்றல் சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 2003 சனவரி 31 ஆம் திகதி கதிர்காமம் பிரதேச செயலாளர் மூலம் அச்சக திணைக்களத்திற்கு 2003 சனவரி 31 ஆம் திகதி கையளிக்கப்பட்ட பரப்பளவு 0.105 ஹெக்டேயர் அளவாக காணி அரசாங்கத்தின் நிறுவனமல்லாத அரசாங்க அச்சக கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் என்றழைக்கப்படும் நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்தது. | இத்திணைக்களத்திற்கு சொந்தமான கதிர்காமம் பிரதேசத்தில் தற்போதுள்ள காணியில் உல்லாச விடுதியின் நிர்மாணப் பணிகள் இடம் பெற்று வருகின்றன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளை முறையான நடைமுறைகளின்றி வெளி நபர்களுக்கு பயன்படுத்துவதற்கு வழங்கப்படக் கூடாது. |